3.02.03.2024 ம் தேதியிட்ட Online ல் உள்ள வழக்கறிஞர் அறிவிப்பு நகல் பு.த.சா.ஆ.3 ஆகவும்,

4. 04.03.2024 ம் தேதியிட்ட எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை பு.த.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 271/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.8 P.W.4 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலகுமார் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.02.2026.

**311 குவிமுச மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீங்கள் கையெழுத்து செய்த ஆவணத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் ரோடு தார் ரோடு என்றால் சரிதான். வழக்கில் இறந்து போன நபர் உறவினர் என்றாலும் நண்பர் என்றாலும் இல்லை, ஊரில் தெரிந்தவர். சம்பவ நடந்த இடத்திலிருந்து மேற்கில் ஒரு பேக்கரி உள்ளது என்றால் ஆமாம் பெயர் என்ன என்றால் ஐயப்பா பேக்கரி . சம்பவ நடந்த இடத்திலிருந்து கிழக்கில் ஒரு கோயில் உள்ளது என்றாலும் அதன் பெயர் உங்களால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றாலும் இல்லை, சொல்ல இயலும் காளியம்மள் கோவில்.
2. தட்டச்சு செய்த ஆவணத்தில் கையெழுத்து செய்திர்கள் என்றால் இல்லை சார் எழுதி கொடுத்த ஆவணத்தில் கையெழுத்து செய்தேன். நீங்கள் கையெழுத்து செய்த போது எத்தனை காவலர்கள் இருந்தார்கள் என்றால் தற்போது சரியாக ஞாபகம் இல்லை 2-3 பேர் இருந்தார்கள். என்ன பதவிலிருந்த காவலர்கள் இருந்தார்கள் என்றால் அது பற்றி தெரியவில்லை.

3. வழக்கில் இறந்து போன நபரின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடந்தது என்றாலும் அவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அஜாக்கிரதையாக வந்ததால் தான் விபத்து நடந்தது என்றாலும் அதுபற்றி தெரியாது அடுத்த நாள் நின்றிருந்த போது போலிசார் வந்தார்கள். காவல் துறையினர் கையெழுத்து பெற்ற பின்னிட்டு உங்களை போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் பக்கத்தில் என்ன என்ன உள்ளது என்று கேட்டார்கள். போலிசார் நீங்கள் சொன்ன விவரத்தை தான் அவர்கள் எழுதினார்கள் என்றால் ஆமாம்.
4. அன்றைய தினம் நீங்கள் அங்கு வர என்ன காரணம் என்றால் பேருந்து நிலையத்தில் நான் நண்பர்களுடன் டீ சாப்பிட்டு பேசி கொண்டிருந்தோம். அன்றைய தினம் உங்களிடம் மட்டும் தான் போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை என் நண்பரிடமும் வாங்கினார்கள். மொத்தம் அன்றைய தினத்தில் எத்தனை கையெழுத்து போட்டிர்கள் என்றால் 1 கையெழுத்து தான் போட்டேன். சம்பவ இடத்தில் மார்க் செய்த போது வரைபடத்தில் எதிரி சரியான பாதையில் வந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வரைபடத்தில் வழக்கில் இறந்து போன நபர் எதிரி சரியான பாதையில் வந்து தான் விபத்து நடந்ததாக உள்ளது என்றாலும் எதிரி சரியான பாதையில் தான் வந்துள்ளார் என்றாலும் சரிதான். வழக்கில் இறந்து போன நபர் தெரிந்தவர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெற வேண்டி பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.